செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், செங்கல்பட்டு.

முன்னிலை : திருமதி.கா. ரோஸ் நிர்மலா, பி.எஸ்சி., எம்.ஏ., எம்.எட்.,

ந.க.எண். 143 /அ1/2020, நாள். .10.2021

பொருள்: பள்ளிக் கல்வித் துறை - பொதுப் பணிகள் - கருணை அடிப்படையில் நியமனம் - பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.ஆ.கோபாலன் என்பவரின் வாரிசுதாரர் திருமதி. கோ. திலகவதி, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செங்கல்பட்டு மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1350/அ1/2017 நாள் .06.2017
2. அரசாணை (நிலை) எண்.48/ தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை நாள் 26.02.2021.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 21925 / ஜே/இ4/2021, நாள் 09.04.2021.
4. மதுராந்தகம், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1514/அ1/2019 நாள் 22.07.2019

=======

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம், போந்தூர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 08.08.2010 அன்று காலமான திரு. ஆ. கோபாலன் என்பவரின் வாரிசுதாரர் திருமதி.கோ.திலகவதி என்பவருக்கு பார்வை 1ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 07.06.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2ல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority) அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும்அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 2ல் காணும் அரசாணையின்படியும், பார்வை 4ல் காணும் கடிதத்தில் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் **திருமதி. கோ.திலகவதி** என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 07.06.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி **திருமதி. கோ. திலகவதி** பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
செங்கல்பட்டு.

பெறுநர் -
சார்ந்த பணியாளர் (உரிய வழியாக)

நகல்
1. மாவட்டக் கல்வி அலுவலர், மதுராந்தகம்
2. வட்டாரக் கல்வி அலுவலர், அச்சிறுபாக்கம்

வட்டாரக் கல்வி அலுவலர்-I
அச்சிறுபாக்கம்